# பத்திரிகைச்செய்தி

# திருப்பூர் மாநகராட்சி

## 114 - திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி

## வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் - 2025

## சிறப்புமுகாம் நடைபெறுதல் தொடர்பான அறிவிப்பு

01.01.2025-ஆம் நாளினை தகுதிநாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் - 2025 மேற்கொள்ள இந்தியதேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட கால அட்டவணைப்படியும், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைபடியும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் ஆணையாளர் திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் அனைத்து வேலை நாட்களிலும் கீழ்க்கண்டவாறு படிவங்களை அளிக்கலாம்.

**வாக்காளர் படிவங்கள் :**

| | |
|---|---|
| படிவம் - 6 | புதிய வாக்காளர்களுக்கான விண்ணப்பப் படிவம். |
| படிவம் - 6A | வெளிநாடுவாழ் வாக்காளர் ஒருவர் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான விண்ணப்பம். |
| படிவம் - 6B | வாக்காளர் பட்டியல் அங்கீகாரத்திற்காக ஆதார் எண் உண்மையெனசான்றுரைத்தல். |
| படிவம் - 7 | நபரின் பெயரை சேர்க்க ஆட்சேபணைக்கான வாக்காளர் விண்ணப்பப் படிவம் / வாக்காளர் பட்டியலில் ஏற்கெனவே உள்ளபெயரைநீக்கக் கோருவதற்கான விண்ணப்பம். |
| படிவம் - 8 | 1) குடியிருப்பு மாற்றத்திற்காக<br>2) நடப்புவாக்காளர் பட்டியலிலுள்ளபதிவுகளைத் திருத்தம் செய்திட (பெயர், பாலினம், பிறந்ததேதி,வயது, உறவுமுறை, உறவினரின் பெயர், முகவரி ,கைபேசிஎண், புகைப்படம்)<br>3) வண்ணவாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பெறுவதற்கு<br>4) மாற்றுத்திறனாளி என குறிப்பதற்கான கோரிக்கை. |

இந்தியதேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின் பேரில் கீழ்கண்ட அட்டவணைப்படி சிறப்பு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | சிறப்புமுகாம்கள் நடைபெறும் நான்கு நாட்கள் | **16.11.2024 (சனிக்கிழமை) &**<br>**17.11.2024 (ஞாயிற்றுக்கிழமை)**<br>**23.11.2024 (சனிக்கிழமை) &**<br>**24.11.2024 (ஞாயிற்றுக்கிழமை)** |

பொதுமக்கள் சிறப்பு முகாம் நாட்களில் தங்களது குடியிருப்புக்கு அருகாமையிலுள்ள வாக்குச்சாவடி அமைவிடங்களில் **காலை 9.00 மணி முதல் மாலை 5.00மணி வரை** படிவம் -6 ,படிவம் -7,மற்றும் படிவம் - 8ஆகியவற்றை அளிக்கலாம் அல்லது**https://voters.eci.gov.in/**என்ற இணையதளம் மூலமாகவும், **Voter Help Line APP என்ற** கைப்பேசி செயலி மூலமாகவும் விண்ணப்பங்களைஅளிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது

வாக்காளர்கள் தங்களது விருப்பத்தின் பேரில், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைத்து கொள்ளலாம் எனவும், 114 - திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் ஆணையாளர் திரு.எஸ்.ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

15/11/24

வாக்காளர் பதிவு அலுவலர்
114 - திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி
மற்றும் ஆணையாளர் திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

15/11/24